*உண்டானதல்ல.”* நாம் செய்த நம்முடைய எந்த நற்செயல்களாலும் நமது பாவத்தை நீக்க இயலாது. 1 யோவான் 1:7 கூறுகிறது, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே சகல பாவங்களிலிருந்தும் நம்மைச் சுத்திகரிக்கிறது. அவர் கடைசி மூச்சு விடுவதற்கு சற்று முன்பு, சிலுவையில் வேதனையில் இருந்தபோது, “எல்லாம் முடிந்தது” என்று சொல்லி அவரது தலையை சாய்த்து ஜீவனை விட்டு நம்முடைய பாவக் கடன் முழுவதுமாக செலுத்தப்பட்டு விட்டதாக அவர் அறிவித்தார்.

இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தேவனின் பிள்ளையாக மாற விரும்பினால், உங்கள் பாவங்களை மன்னிக்கும்படி அவரிடம் வேண்டுதல் செய்யுங்கள். மேலும், உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்புக்கொடுங்கள். 1 யோவான் 1:9 கூறுகிறது *“நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்”.* நீர் ஒரு பாவி என்பதை உணர்ந்து, தேவனுடைய இரட்சிப்பின் ஈவை ஏற்றுக்கொண்டால், உங்களை ஆறுதல்படுத்தவும், வழிநடத்தவும், உற்சாகப்படுத்தவும் பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்திற்குள் வாசம் பண்ணுவார். அவர் உங்கள் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்புவார், நீங்கள் நித்திய பரலோகத்தில் என்றென்றும் தேவனை துதித்து அவரோடு வாழுவீர்கள் என்று அறிந்து கொள்வதில் உங்களுக்கு சந்தோஷம் அல்லவா!?

SATHGAMAYA MEDIA FOUNDATION

# நமக்கு ஒரு இரட்சகர்



அன்று ஒரு மத்தியான நேரமாக இருந்தும் வானம் இருண்டு அந்தகாரமானது. தேவ குமாரனாகிய இயேசு, சிலுவையில் அறையப்படுவதைக் காண ஏராளமான ஜனங்கள் எருசலேம் நகருக்கு வெளியே பல மணி நேரம் கூடியிருந்தனர். கொடூர மரணத்திற்கு ஏதுவாக அவர் என்ன குற்றம் செய்தார்? இயேசு பரிபூரணமானவர், அவர் பாவம் செய்யாதவர், இருப்பினும் பொறாமைக்காரர்கள் அவரை பரிகசித்து, இரக்கமின்றி அடித்து, அவருடைய கைகளிலும் கால்களிலும் ஆணிகளால் சிலுவையில் அறைந்தனர். இயேசு இறந்துவிட்டார் என்று அவர்கள் களிகூர்ந்தனர், மேலும் சீடர்கள் அவரை பின்தொடர்வது விரைவில் குறையும் என்று நம்பினார்கள். ஆயினும், இவையெல்லாம் சிருஷ்டிகர்த்தரின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்த தேவ குமாரனை நமது இரட்சகராக்குவதே தேவனுடைய திட்டமாயிருந்தது. “ஏன் எனக்கு ஒரு இரட்சகர் தேவை?” என்றும், “என்னுடைய தகுதிகளின் அடிப்படையில் என்னால் சொர்க்கத்தில் நுழைய முடியுமல்லவா?” என்றும் நீங்கள் கேட்கலாம்.

இந்தக் கேள்விகளுக்கு விடை காண, நாம் படைப்பின் தொடக்கத்திற்குச் செல்ல வேண்டும். பாவம், மரணம் மற்றும் வலி இல்லாத ஒரு பரிபூரண உலகத்தை தேவன் படைத்து, அதில் அவர் ஆதாமையும், ஏவாளையும் தமது சாயலில் உருவாக்கி, குடும்பமாக தேவனோடு நெருங்கிய உறவுடன் வாழ அவர் அவர்களை ஒரு அழகான தோட்டத்தில் வைத்தார். நன்மை தீமை அறியும் மரத்தின் கனியை தவிர, ஏதேன் தோட்டத்திலுள்ள எந்த மரத்தின் கனியையும் புசிக்கலாம் என்று தேவன் அவர்களுக்குச் சொன்னார். நன்மை தீமை அறியும் இந்த கனியை அவர்கள் புசித்தால், அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, பாவத்தை அறிந்து, அவர்களின் பரிபூரண வாழ்க்கையை இழந்துவிடுவார்கள் என்றும், மேலும், அதனால் சாகவே சாவாய் என்றும் தேவன் அவர்களை எச்சரித்திருந்தார். ஆயினும் ஆதாமும் ஏவாளும் அந்த கனியை புசித்து, தங்கள் சிருஷ்டிகருக்கு கீழ்ப்படியாமல் போனார்கள். துணிகரமான கீழ்ப்படியாமையின் இந்தச் செயல் உலகத்திற்குள் பாவத்தைக் கொண்டு வந்தது. ரோமர் 5:12 கூறுகிறது, *“இப்படியாக, ஒரே மனுஷனாலே [ஆதாம்] பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது…”* நோய்கள், வியாதிகள், பாடுகள் மற்றும் மரணம் இப்போது நமது வாழ்வின் ஒரு அம்சமாகவே மாறிவிட்டது. தேவனிடமிருந்து நம்மை நித்தியமாக பிரித்ததுதான் நம்முடைய பாவத்தின் மிக பெரிய விளைவாக இருக்கிறது. தேவன் பரிசுத்தமானவர். பரலோகத்தில் எவ்வித பாவ ஆத்துமாவும் அணுக இயலாது. நாம் தேவனுடைய கோபாக்கினைக்கு தகுதியானவர்கள், ஆனால் அவருடைய அற்புதமான திட்டத்தின்படி அன்பினாலும், கிருபையினாலும், இரக்கத்தினாலும் பாவ மனிதர்களை மீட்க ஒரு இரட்சகரை அனுப்பினார், அவர்தான் இயேசுகிறிஸ்து.

இயேசு, தேவ திட்டத்தின்படி, பெத்லகேமில் குழந்தையாகப் பிறந்து, பின்னர் வளர்ந்து, ஜனங்களுக்குப் போதித்து, பல அற்புதங்களைச் செய்தார். அவர் 33 வயதில் **நம்முடைய பாவத்திற்கான தண்டனையைச் சுமக்க மரச்சிலுவையில் அறையப்பட்டு தம்மைதாமே தியாகம் செய்தார்.**

இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார், மூன்றாம் நாளில் சில பெண்கள் வந்து கல்லறை வெறுமையாக இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். இரண்டு தூதர்கள் தோன்றி, *“இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்”* என்று அறிவித்தனர். இயேசு தம்முடைய சீஷர்களுக்கும், பல ஜனங்களுக்கும் தரிசனமானார். சர்வவல்லமையுள்ள அவருடைய பிதாவானவரின் திட்டத்தின்படி கிறிஸ்துவை, பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் வெற்றி பெறச் செய்து மரித்தோரிலிருந்து எழுப்பினார். **இயேசுகிறிஸ்து, அவர் சொன்னபடியே மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார்.**

நமது பாவங்கள் நீக்கப்படவும், தேவனுடன் ஒப்புரவாகவும் விரும்பினால், நமக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை ஒப்புக்கொண்டு, அவர் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். எபேசியர் 2:8-9ல் நாம் வாசிக்கிறோம், *“கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (பரிசு) — ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால்*